[12th September 1958

THE HON. SRI P. KAKKAN : (*a*) (1) Nil.

(2) Technical—

Junior Engineers and Supervisors	12
Draughtsmen	4
Tracer	1
Non-technical—	
Clerks and Attenders	24

(*b*) 32.

* 203-H *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

போளூர் தாலூகா முக்குரும்பை கிராமத்திற்கு ரோடு போடுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம் உண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir.

Geological survey

* 203-I *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any geological survey has been undertaken in the Ramanathapuram district so far; and

(*b*) the result of such survey, if any?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The particulars are given in the paper [a] placed on the table of the House.

SRI K. RAMACHANDRAN : மேஜையில் வைக்கப்பட்டிருக்கிற தாளில் லைம்ஸ்டோன் 4,362,000 டன் வரைக்கும் கிடைக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை எடுக்க என்ன முயற்சி செய்திருக்கிறார்கள் ? அதே மாதிரி அங்கே சிவகெங்கைப் பக்கம் வார்னிஷ் கிடைக்க வசதி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதை எடுக்கவும் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அரசாங்கம் நேரிடையாக இந்த விஷயத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கில்லை. போதுமான மூலதனம் அரசாங்கத்தினிடம் இல்லாததுதான் இதற்குக் காரணம். தனியார் துறையிலிருந்து இதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அரசாங்கம் உதவி செய்யும். அதே மாதிரி அங்கே பெயின்ட் செய்வதற்கு வசதி இருப்பதை உணர்ந்துதான் அதைப் பிரசுரம் மூலமாக பொதுமக்கள் எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறோம். தனியார் துறையிலிருந்து இதற்கும் முயற்சி எடுக்கப்பட்டால் அரசாங்கம் உதவி செய்யும்.

Irrigation.

* 203-J *Q*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூகாவில் ஓடும்

(1) நீர்ப்பாசன, வாய்க்கால்கள்,

(2) வடிகால்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் (1) 1955–56, (2) 1956–57-ல் எத்தனை வாய்க்கால்கள் மராமத்து இலாகாவினால் செப்பனிடப்பட்டன ?

(இ) அவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

---

[a] Printed as Appendix II on pages 763–765 infra.